DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No. 45/2024

Deposition of Witness of PW7

Name	: விஜயராணி	Caste	:
Father's Name	: சண்முகம்	Calling	:
Village	:	Religion	:
Taluk	:	Age	:

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 17th July 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

முதல் விசாரணை:

நான் தற்போது ஜெயராமபுரத்தில் வசித்து கொண்டு கஸ்துாரிபா கிராமம் துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் உயர்நிலையில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். 29.11.2016ம் தேதியில் கஸ்துாரிபா கிராம துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியராக பணியில் சேர்ந்தேன். ஆஜர் எதிரி அறக்கட்டளைக்கு நிதி வேண்டும் என்ற என்னிடம் கேட்டார். நான் என்னுடன் பிறந்த தம்பியிடம் அறக்கட்டளைக்கு நன்கொடை கேட்ட விபரத்தை சொன்னேன். என் தம்பியிடம் ரூ.8 லட்சம் கடனாக வாங்கி ஆஜர் எதிரி பெரியசாமியிடம் முதல் தவணையாக மார்ச் 2017ல் ரூ.3லட்சமும், ஏப்ரல் 2017ல் 2வது தவணையாக ரூ.3லட்சமும், ஜுன் மாதம் 3வது தவணையாக ரூ.2லட்சமும் கந்தசாமிபாளையத்தில் உள்ள சூர்யா பேக்கரில் வைத்து எதிரியிடம் ரொக்கமாக கொடுத்தேன்.

2. மேற்படி தொகைக்கு எதிரி கொடுக்குமாறு இரசீது கேட்டேன். அவர் கொடுக்காத காரணத்தினால் இது சம்பந்தமாகஎங்கள் அறக்கட்டளை செயலாளர் SN.பாலசுப்பிரமணியத்திடம் சொன்னேன். அதற்கு அவர் அரச்சலுார் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். என்னை இது சம்பந்தமாக போலீஸார் விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

நான் Diploma in TeachersTraining, மற்றும் M.A.தமிழ், B.A படித்துள்ளேன். நான் என்ன தகுதியின் அடிப்படையில் தலைமை ஆசிரியர் பதவிக்கு நியமிக்கப்பட்டேன் என்றால் நான் ஆசிரியர் தகுதி தேர்வு எழுதி தேர்வு பெற்றுள்ளேன், தனியார் பள்ளியில் 5 வருடம் ஆசிரியராக பணிபுரிந்தேன், D.T.Ed. முடித்துள்ள காரணத்தினால் துவக்கபள்ளி தலைமை ஆசிரியராக பணியமர்த்தப் பட்டேன். நான் என் தம்பியிடம் கடன் வாங்கியதற்கும், எதிரியிடம் ரொக்கமாக கொடுத்தற்கும் ஆதாரம்க உள்ளதா என்றால் இல்லை. போலீஸார் நான் ரூ.8லட்சம் கொடுத்தற்கான ஆதாரம் கேட்டார்களா என்றால் இல்லை. இந்தவழக்கு சமயத்தில் எனக்கு மாதம் சம்பளம்எவ்வளவு என்றால் ரூ.36,500/– எனக்கு PAN கார்டு வைத்துள்ளேன்.

2. எனது சம்பள வருமானத்திற்கு வருமானவரி கணக்கு தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான். நான் கடந்த 9 வருடங்களாக வருமானவரி தாக்கல் செய்து வருகிறேன். நான் தலைமை ஆசிரியர் என்பதால் பள்ளியின் செயலாளர் SN.பாலசுப்பிரமணியத்தை நேரில் சந்திக்கும் வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். நான் முதல் தவணை ரூ.3லட்சம் கொடுத்ததாக சொல்லும் காலத்திற்கு பிறகு 2வது தவணை எதிரியிடம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் முதல் தவணைக்குண்டான இரசீதினை கேட்டேனா என்றால் இல்லை. நான் ரூ.8லட்சம் பணம் கொடுத்ததாக சொல்வதற்கு சாட்சியாக யாராவது உள்ளார்களா என்றால் இல்லை என கூறிவிட்டு தற்போது சாட்சி நான் பணம் கொடுக்கும்போது எனது தம்பி உடன் இருந்ததாக கூறுகிறார்.

3. நானும், எனது தம்பி சூர்யா பேக்கரியில் இருந்தோம் என்பதை காண்பிப்பதற்கான எந்த சாட்சியும் இல்லை என்றால் சரிதான். நான் முதல் தவணை தொகை கொடுத்தற்கு பின்னிட்டு பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவரிடம் புகார் கொடுத்தேனா என்றால் 2 பெற்றோர் ஆசிரியர் சங்கம் உள்ளது, அதில் நான் துவக்கபள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவரிடம் இரசீது கொடுக்காத சம்பந்தமாக குறிப்பிடவில்லை. எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் ரூ.8 லட்சம் தொகையை எனதுவருமானவரி தாக்கல் கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. தலைமை ஆசிரியருக்கும், பள்ளி நிர்வாக செயலாளர் பாலசுப்பிரமணியத்திற்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாடு

காரணமாக பாலசுப்பிரமணியத்தின் தூண்டுதல் பேரில் பணம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சி ஒம்/- விஜயராணி

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXV Code of BNSS 2023)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK
CC.No. 45/2024

Deposition of Witness of PW6

Name	: பெரியசாமி	Caste	:
Husband's Name	: சுப்பிரமணி	Calling	:
Village	:	Religion	:
Taluk	:	Age	:

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 17th July 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.
<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது கஸ்துாரிபா கிராமம் பள்ளி கோட்டர்ஸ்–ல் வசித்து கொண்டு கஸ்துாரிபா கிராமம் உயர்நிலை பள்ளியில் வாட்ச்மேனாக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 16.09.2015ம் தேதி நான் பள்ளியில் வாட்ச்மேனாக வேலைக்கு சேர்ந்தேன். அப்போது ஆஜர் எதிரி தலைமை ஆசிரியாக பணிபுரிந்தார். அறக்கட்டளைக்கு டெனேசன் தரவேண்டும் என பணம் ரூ.34,000ரூபாய்களை ஆஜர் எதிரி என்னிடம் கேட்டார். நான் கொடுத்தேன். இரசீது கொடுப்பதாக சொன்னவர் பின்னிட்டு தரவில்லை. செயலாளர் SN. பாலசுப்பிரமணியம் அய்யாவிடம் இதுகுறித்து சொன்னேன். அவர் எழுதிக்கொடுக்க சொன்னார். நான் எழுதிக்கொடுத்தேன். செயலாளர் அவர்களிடம் நான் கொடுத்த புகார் என்னிடம் காண்பிக்கப்படும் தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸார்என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

நான் இரவு காவலர் என்பதால் என் பணி முடிந்து செல்லும்போது தினமும் அறக்கட்டளை செயலாளர் SN பாலசுப்பிரமணியத்தை பார்த்து விட்டு செல்வேன் என்றால் சரிதான். பள்ளி தலைமை ஆசிரியர் என்னிடம் நன்கொடை கேட்ட விபரத்தை தினமும் பார்க்கும் அறக்கட்டளை செயலாளர் பாலசுப்பிரமணியத்திடம்

சொன்னேனா என்றால் சொல்லவில்லை. இந்த வழக்கு சம்பவ நடந்ததாக சொல்லும் சமயத்தில் எனக்கு சம்பளம் ரூ.15,000/–. நான் வழக்கு சம்பவ தேதியிலிருந்து இதுவரை 10 வருடம் காவலாளியாக பணிபுரிந்து வருகிறேன். பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் தங்கவேலை தெரியும். அவரிடம் தலைமை ஆசிரியர் நன்கொடை கேட்ட விபரத்தை நான் சொன்னேனா என்றால் இல்லை. நன்கொடை இரசீதினை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. நான் 10 ஆண்டுகளாக பணிபுரியும் நான் நன்கொடை இரசீதினை பார்க்காத நான் எதிரியிடம் பணம் கொடுத்ததாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தலைமை ஆசிரியருக்கும், பள்ளி நிர்வாக செயலாளர் பாலசுப்பிரமணியத்திற்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக பாலசுப்பிரமணியத்தின் தூண்டுதல் பேரில் பணம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சி ஓம்/- பெரியசாமி

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No. 45/2024

Deposition of Witness of PW5

Name	: அர்ச்சுனன்	Caste	:
Husband's Name	: கருப்பணகவுண்டர்	Calling	:
Village	:	Religion	:
Taluk	:	Age	:

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 17th July 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது ஜெயராமபுரத்தில் வசித்து கொண்டு கஸ்துாரிபா கிராமம் உயர்நிலை பள்ளியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் 2014லிருந்து உயர்நிலை பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்தார். கடந்த 11.04.2014ல் செய்தித்தாளில் வந்த விளம்பரத்தின் அடிப்படையில் மேற்படி பள்ளியில் பணிபுரிவதற்காக நேர்முக தேர்வில் பங்கேற்று அந்த பள்ளியின் அலுவலக உதவியாளராக தேர்வு செய்யப்பட்டேன். எனக்கு மாவட்டகல்வி அலுவலர் என்னுடைய பணிநியமனத்திற்கு ஒப்புதல் அளிக்காத காரணத்தினால் பள்ளி நிர்வாகம் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தேர்வு செய்யப்பட்ட பணி ஒப்பதல் பெறப்பட்டது.

2. பின்னிட்டு அறக்கட்டளைக்கு நன்கொடை கொடுக்க வேண்டும் என்று பள்ளி தலைமை ஆசிரியர் பெரியசாமி நன்கொடை கேட்டார்.அதன் அடிப்படையில் நான் 2018ம் ஆண்டு அவரிடம் ரூ.1,50,000/-த்தை ரொக்கமாக கொடுத்தேன். இரசீது கேட்டேன், அவர் இரசீது கொடுக்கவில்லை. இது சம்பந்தமாக அறக்கட்டளை செயலாளர் SN.பாலசுப்பிரமணியத்திடம் தகவல் சொன்னேன். அவர் நான் பார்த்து கொள்கிறேன் என்று சொன்னார். இதுசம்பந்தமாக பாலசுப்பிரமணியம் கொடுத்தபுகாரின் அடிப்படையில் போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். தலைமை ஆசிரியர் நன்கொடை கேட்ட விபரத்தை செயலாளர் பாலசுப்பிரமணியத்திடம் சொன்னேனா என்றால் சொன்னேன்.ரூ.1,50,000த்தை ரொக்கமாக கொடுத்தற்கான என்னிடம்அன்றைய தேதியில் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நான் சம்பளத்திற்கான வருமானவரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை, நான் PAN கார்டு பயன்படுத்துவதில்லை. அறக்கட்டளை சார்பாக இரசீது அதன் செயலாளர் தான் கொடுப்பார் என்றால் செயலாளர் தான் கொடுப்பார் என்ற விபரம் தெரியும். இது சம்பந்தமாக என்னுடன் பணியாற்றிய ஆசிரியர் புகார் கொடுத்த விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

2. நான் ரொக்கமாக ரூ.1,50,000த்தை எதிரியிடம் கொடுத்த தேதியே தெரியவில்லை என்று சொல்லும் நிலையில் நான் ரொக்கமாக எதிரியிடம் பணத்தை தரவில்லை என்றால் சரியல்ல. தலைமை ஆசிரியருக்கும், பள்ளி நிர்வாக செயலாளர் பாலசுப்பிரமணியத்திற்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக பாலசுப்பிரமணியத்தின் தூண்டுதல் பேரில் பணம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சி ஒம்/- அர்ச்சுனன்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.